கொள்ளப்படும். பணத்தைக் கட்டிவிட்டால் குற்றம் செய்தவரை விட்டு விடுவது என்ற நிலை கிடையாது. அதற்கான வழக்குகள் தொடரப்படும்.

வல்லம்படுகை—குமராட்சி சாலை

*550 வினு.—திரு எஸ். சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா :

சிதம்பரம் தாலூகா வல்லம்படுகையிலிருந்து வடக்குமாங்குடி, தெற்குமாங்குடி, அத்திப்பட்டு நந்திமங்கலம், கீழக்கரை முதலிய கிராமங்கள் வழியாக குமராட்சிக்கு ரோடு போடும் திட்டம் தற்போது எந்த நிலையிலுள்ளது :

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தெற்கு மாங்குடிக்கும் அத்திப்பட்டுக்குமிடையேயும், நந்திமங்கலத்துக்கும் கீழக்கரைக்குமிடையேயுந் தான் சாலை வசதிகள் தற்சமயமில்லை. இவ்விரு சாலைகளேயும் கிராமப் பணித் திட்டத்தின் கீழ் குமராட்சி பஞ்சாயத்து ஒன்றியமே அமைத்துக்கொள்ள முடியும். நந்திமங்கலம்—கீழக்கரை சாலைக்கு வேண்டிய நிலம் இலவசமாகக் கிடைக்காவிடில், இந்த இணைப்புச் சாலைக்கான செலவு 40,000 ரூபாய்க்கு மேலாகலாம். அந்த நிலையில் இந்த வேலை "ஏனைய சாலைகளின்" கீழ் மேற்கொள்ளப்படவேண்டியிருந்தால், இந்த இணைப்புச் சாலையை அமைக்க இன்னும் சில ஆண்டுகளாகும்.

திரு எஸ். சிவசுப்பிரமணியன் : சிதம்பரம் தாலூக்கா குமராட்சி யூனியனுககுக் கிழக்கேதான் எல்லா பஞ்சாயத்துக்களும் அடங்கியிருக்கின்றன. எல்லாவற்றுக்கும் அந்தக் பகுதி கிராம மக்கள் குமராட்சிக்குத் தான் வர வேண்டியிருக்கிறது. சுற்றிப் போனுல் 15 மைல் ஆகிறது. குறுக்கே போனுல் ஆறு அல்லது ஏழு மைல்தான் ஆகும். ஆகவே, இந்தக் குறுக்கு ரோடை வல்லம்படுகை, வடக்கு மாங்குடி, தெற்கு மாங்குடி, புல்லம்பாடு வழியாக போட்டுக் கொடுத்தால் பொதுமக்களுக்கு சவுகரியமாக இருக்கும். இதை உடனடியாக அரசாங்கம் நிறைவேற்றித் தருமா ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : தொகையை அதிகமாகச் செலவழிக்க வேண்டிய நிலைமை ஏற்படும்போது புதிய பணிகளாகத்தான் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. புதிய பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய நிலையை ஆங்காங்கு இருக்கும் மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் பரிந்துரை செய்து அனுப்புகின்றன. மூன்ருவது திட்டத்திற்காக மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் ஏற்கனவே தேர்ந்தெடுத்த 212 வேலைகளில் இன்னும் 184 பணிகள் அனுமதி வழங்கப்படாத நிலை இருக்கிறது. இந்தப் பணியை அந்த முறை வரிசைப்படி எடுத்துக் கொள்ள வேண்டிய சங்கடம் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களுக்கு உரிய அடுத்த கேள்விக்குக் கல்வி அமைச்சர் அவர்கள் பதிலளிப்பார்கள்—

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி நிறுவனக் கூட்டம்

*551 வினு.—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா :

27—5—1968 தேதி ஊட்டியில் நடந்த தொழிலாளர் நல அரசாங்க இன்சூரன்ஸ் திட்ட ஆலோசனைக் கூட்டத்தில் என்னென்ன முடிவுகள் எடுக்கப்பட்டன ?